# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | CC. No.255/2020 |
| Miscellaneous | : | |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.1 |
| Name : | | **பிரேமலதா** |
| Father's/Husband Name: | | தமிழரசன் |
| Village : | | பசும்பலூர் |
| Taluk : | | வேப்பந்தட்டை |
| Age : | | 54 /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.07.2022

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் வீட்டில் தான் இருக்கிறேன் வேலைக்கு செல்லவில்லை. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்களுக்கு சொந்தமான இடம் மேற்கு காலனியில் இருக்கிறது. மேற்கு காலனியில் சர்வே எண்.201. 2 ஏக்கர் இடம் இருந்தது. கிணறு வெட்ட ஜனவரி மாதம் 22–ம் தேதி 2020ம் வருடம் காலை 10.00 மணியளவில் ஆட்களை கூட்டி கொண்டு எனது வீட்டுக்காரர் கிணறு வெட்டும் ஆட்கள் மற்றும் நீர் ஊற்று பார்க்கும் ஆட்கள் ஆகியோரை கூட்டி கொண்டு போனோம். கிணறு வெட்ட போன போது தகராறு ஆயிற்று. மணப்பாறை புள்ளா மேய்ஞ்சிட்டு வந்து இங்க எங்கடி உனக்கு இடம் இருக்கு என்று சொல்லி செல்லதுரை என் கண்ணத்தில் அறைந்து முடியை பிடித்து வெளியே போடி என்று திட்டினார். அவர் பொண்டாட்டி மகேஷ்வரி சேலையை பிடித்து இழுத்து உங்களுக்கு என்னடி வேலை இருக்கு என்று அசிங்கமான வார்த்தைகள் சொல்லி என் கண்ணில் இருக்கும் புள்ளியெல்லாம் வைத்து திட்டினார்கள். பூபதி என்பவர் வந்து அவள அருவாளால் வெட்டுங்க, கொடுவாளால் வெட்டுங்க இங்கேயே வெட்டி மண்ணில் புதையுங்கள் என்று திட்டினார். அதற்கு அப்புறம் அவங்க வீட்டுக்காரம்மா கீதா என்பவர் சேலையெல்லாம் பிடித்து இழுத்து பசும்பலூர்காரிகளுக்கு தான் சொந்தம் இங்கே இருந்து ஒரு பிடி மண்ணு கூட அள்ளி போக முடியாது என்று சொன்னார். அதுக்கு அப்புறம் நாங்க போலிஸில் போய் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அ.த.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படுவது தான் என் பெயரில் உள்ள பட்டா நகல் மற்றும் சிவில் நீதிமன்றத்தில் எங்களுக்கு ஆதரவாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் RDO உத்தரவு நகல் மற்றும் அதை எதிர்த்து எதிரிகள் மேல் முறையீடு செய்த DRO உத்தரவு நகல் ஆகியவை மேற்படி ஆவணங்கள் அ.த.சா.ஆ.2 முதல் 5 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. (ஆவணங்களாக குறியீடு செய்வதற்கு எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை). போலிசார் என்னை விசாரித்தார்கள். ரொம்ப நாள் கழித்து தான் வந்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். எனது கணவர் தமிழரசன் அரசு வழக்கறிஞராக இருந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். அவர் எந்த வருடம் ஓய்வு பெற்றார் என்றால் 2019 வருடம் ஓய்வு பெற்றார். நாங்கள் குடியிருக்கும் வீடு பசும்பலூரில் இருக்கிறது என்றால் சரிதான். நாங்கள் குடியிருக்கும் வீடு பசும்பலூரில் இருந்து 4 கி.மீ தள்ளி பசும்பலூர் காலனியில் இருக்கிறது என்றால் சரிதான். எங்களுக்கு சொந்தமாக நிலம் இருக்கிறது என்று நான் சொல்லுவது யாரிடம் இருந்து வாங்கவில்லை என்றாலும் அரசாங்க நிலம் என்றாலும் சரிதான். தற்போது எனக்கு பட்டா போட்டு கொடுத்துள்ள நிலத்தில் முன்பு மூப்பனார் கோவில், செல்லியம்மன் கோவில் ஆகியவை இருந்து அதையெல்லாம் இடித்து விட்டு தான் எனக்கு பட்டா போட்டு கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த நிலம் எனக்கு எப்போது பட்டா கொடுக்கப்பட்டது என்றால் 1998–ல் கொடுக்கப்பட்டது. 1998–ல் பட்டா வழங்கப்பட்டது என்று போலிஸ் விசாரணையில் ஆவணங்கள் கொடுத்து தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். நான் சொல்வது போல் 1998–ல் பட்டா வாங்கவில்லை என்றாலும் அதன் பின்னிட்டு என் கணவர் அரசு வழக்கறிஞராக இருந்ததால் அவரது செல்வாக்கை பயன்படுத்தி அரசு நிலத்துக்கு பட்டா வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் அரசு நிலத்துக்கு பட்டா வாங்கியதால் அந்த காலனியில் இருந்தவர்கள் 20 வருடமாக எனக்கு எதிர்ப்பு தெரிவித்து கொண்டு இருந்தார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளின் வீடு நான் வாங்கியுள்ள நிலத்திற்கு இடையில் 100 மீ தூரம் இருக்குமா என்றால் 10 அடி தூரம் கூட வராது. நான் அந்த இடத்திற்கு பட்டா போடுவதை தடுத்தார்கள் என்று அந்த காலனி தெருவை சேர்ந்த ஆறுமுகம், த/பெ.ராயமுத்து, முத்துசாமி த/பெ.ராயமுத்து, ராமசாமி த/பெ.ராயமுத்து, ஞானபிரகாசம் த/பெ.ஆறுமுகம் (எ) தேவநாயகம் ஆகியோர் மீது பெரம்பலூர் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.326/2001 ஆக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். கடந்த 17.07.2018 அன்று என் மீதும் என் கணவர் மீதும் என் மகன்கள் அருண்பிரகாஷ், அருண் பிரதீபன், மகள் அருண் ஜெனீரா மற்றும் கனகராஜ் மீது பவுனம்மாள் என்பவர் வி.களத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வி.களத்தூர் காவல் நிலைய குற்ற எண்.143/2018 ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 22.01.2020–ம் தேதி எனக்கு சொந்தமான காட்டிற்கு யார் யார் போனோம் என்றால் நான் எனது கணவர், வேலை செய்கிற ஆட்கள், நீர் ஊற்று பார்க்கிறவர்கள் போனோம். வேலை செய்யற ஆட்கள் எத்தனை பேர் என்றால் எனக்கு தெரியவில்லை. மேற் சொன்ன நபர்களை தவிர வேறு யாரும் போனோமா என்றால் இல்லை. இந்த பிரச்சனை சம்மந்தமாக நான் எந்த தேதியில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் எனக்கு தெரியவில்லை. காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை யார் எழுதியது என்றால் எனது வீட்டுக்காரர் தான் எழுதினார். புகாரை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். நான் படித்து பார்த்து சொன்ன புகாரில் நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் இருந்தது என்றால் சரிதான். என்னை கன்னத்தில் அறைந்ததாக சொன்னதில் கன்னத்தில் காயம் இருந்ததா என்றால் இல்லை. நான் கொடுத்த புகாரில் வேலைக்கு வந்த ஆட்களின் பெயரையோ நீருற்று

பார்க்க வந்த ஆட்களின் பெயரையோ குறிப்பிட்டு சொல்லி இருந்தேனா என்றால் யார் பெயரையும் சொல்லவில்லை. நான் காட்டுக்கு போயிருக்கும் போது கூட வேலைக்கு வந்த ஆட்களோ நீருற்று பார்க்கும் ஆட்களோ இல்லை என்றாலும் அதனால் தான் அவர்கள் பெயர்களை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து காவல் துறையில் புகார் கொடுத்தேன் என்றால் அன்றைக்கே புகார் கொடுத்தேன். ஆனால் ரொம்ப நாள் கழித்து தான் விசாரணை செய்தார்கள். இரண்டு தரப்பையும் கூப்பிட்டு விசாரித்தார்களா என்றால் இல்லை என்னை மட்டும் தான் விசாரித்தார்கள். என்னை எந்த இடத்தில் யார் விசாரித்தார்கள் என்றால் வி.களத்தூர் போலிஸ் ஸ்டேசனில் விசாரித்தார்கள். அங்கு என்னை மட்டும் தான் விசாரித்தார்களா வேறு யாரையும் விசாரித்தார்களா என்றால் என்னை மட்டும் தான் விசாரித்தார்கள். எனது கணவர் தமிழரசனை எப்போது விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை. என்னை விசாரித்த அன்றே என் கணவரையும் விசாரித்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னை போலிஸ் விசாரித்த போது முதல் விசாரணையில் என்ன என்ன விவரம் சொன்னேனோ அதை தான் சொன்னேன் என்றால் சரிதான். என்னை காவல் நிலையத்தில் விசாரித்த போது என்னுடன் வந்த நீருற்றுகாரர் பெயர் மற்றும் கூலி ஆட்கள் பெயர் ஆகியவற்றை சொன்னேனா என்றால் சொல்லவில்லை. என்னுடைய சேலை பிடித்து இழுத்ததில் கிழிந்து இருந்ததா என்றால் கிழியாமல் நான் பிடித்து கொண்டு இருந்ததால் கிழியவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் எதிரிகள் என் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய எதிர்ப்பு தெரிவித்த பசும்பலூர் மேற்கு காலனிகாரர்கள் என்பதால் முன் விரோதத்தின் காரணமாக அவர்கள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.